A consumer is the important visitor on our premises.
He is not dependent on us. We are dependent on him.
– Mahatma Gandhi

# TAMIL NADU ELECTRICITY OMBUDSMAN

4th Floor, SIDCO Corporate Office Building, Thiru-vi-ka Industrial Estate,
Guindy, Chennai – 600 032.
Phone : ++91-044-2953 5806, 044-2953 5816 Fax : ++91-044-2953 5893
Email : tneochennai@gmail.com Web site : www.tnerc.gov.in

**முன்னிலை: திரு. செ.தேவராஜன், மின்குறைதீர்ப்பாளர்**

**மேல்முறையீட்டு மனு எண் 05 / 2022**

திரு. S. தியாகு,
த/பெ. மு.சாமிக்கண்ணு,
எண் 7/A, கங்கையம்மன் கோயில் தெரு,
காலவாக்கம், திருப்போரூர் வட்டம்,
செங்கல்பட்டு மாவட்டம் – 603 110. ………மேல்முறையீட்டாளர்
(Rep. by திரு மு.சாமிக்கண்ணு)

எதிர்

செயற்பொறியாளர்/ இ&ப/மறைமலைநகர்,
செங்கற்பட்டு மின் பகிர்மான வட்டம்,
தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம்,
110 KV SS வளாகம், GST ரோடு,
போர்டு கம்பெனி அருகில், மறைமலைநகர் – 603 209.
...... எதிர்மனுதாரர்
(திரு A. பாலசுப்பிரமணியம், செயற்பொறியாளர்/
இ&ப/மறைமலைநகர்)

**மனு பெறப்பட்ட நாள்: 05-01-2022**

**கேட்புரை நாள்: 09-03-2022**

**ஆணை நாள்: 29-03-2022**

05.01.2022 அன்று பெறப்பட்ட திரு. S. தியாகு, த/பெ. மு.சாமிக்கண்ணு, எண் 7/A, கங்கையம்மன் கோயில் தெரு, காலவாக்கம், திருப்போரூர் வட்டம், செங்கல்பட்டு மாவட்டம் – 603 110 அவர்களின் மனு மேல்முறையீட்டு மனு எண் 05/2022 ஆக பதிவு செய்யப்பட்டுள்ளது. மேற்கண்ட மனுவின் மீது மின்குறைதீர்ப்பாளரின் கேட்புரை 09.03.2022 அன்று நடைபெற்றது. மேல்முறையீட்டாளரின் மனுவிலுள்ள வாதங்கள், எதிர்மனுதாரரின் பதிலுரையிலுள்ள வாதங்கள் மற்றும் இருதரப்பினராலும் கேட்புரை நாளில் எடுத்துரைக்கப்பட்ட வாதங்கள் ஆகிய அனைத்தையும் ஆராய்ந்து மின்குறைதீர்ப்பாளரால் கீழ்க்கண்ட ஆணை வழங்கப்படுகிறது.

## ஆணை

1. **மேல்முறையீட்டாளரின் கோரிக்கை:**

சர்வே எண் 241/1–இல் அமைந்துள்ள தனது குடியிருப்புக்கு மின் இணைப்பு வழங்குமாறு மேல்முறையீட்டாளர் விண்ணப்பித்துள்ளார்.

2.0 **வழக்கின் சுருக்கம்:**

2.1 கிராம நத்த நிலத்தில் தான் கட்டியுள்ள வீட்டிற்கு மின் இணைப்பு வழங்குமாறு மின்சார வாரியத்தில் விண்ணப்பித்ததாக மேல்முறையீட்டாளர் தெரிவித்துள்ளார்.

2.2 மின் இணைப்பு பெறுவதற்கு வைப்பு தொகை செலுத்துவதற்காக உதவி பொறியாளர்/திருப்போரூர் அவர்களை அனுகிய போது நீதிமன்ற ஆணையின்படி தமிழ்நாடு மின்சார வாரிய தலைமை பொறியாளரின் சுற்றறிக்கையில் அரசு புறம்போக்கு நிலங்களில் மின் இணைப்பு வழங்கக்கூடாது என்று உதவி பொறியாளர் கூறியதாக மேல்முறையீட்டாளர் தெரிவித்துள்ளார்.

2.3 தனது விண்ணப்பத்தை உதவி பொறியாளர்/திருப்போரூர் ஏற்க மறுத்திடவே மேல்முறையீட்டாளர் திருப்போரூர் மின்பகிர்மான வட்டம், மின் நுகர்வோர் குறைதீர் மன்றத்தை அணுகியுள்ளார்.

2.4 மின் நுகர்வோர் குறைதீர்க்கும் மன்றம், திருப்போரூர் மின்பகிர்மான வட்டம் 19.11.2021 அன்று தன்னுடைய ஆணையை அளித்துள்ளது. மன்றம் அளித்த தீர்ப்பில் அதிருப்தியுற்றதால் இந்த மேல்முறையீட்டு மனுவினை மேல்முறையீட்டாளர் மின்குறைதீர்ப்பாளரிடத்தில் சமர்ப்பித்துள்ளார்.

3.0 **மன்றத்தின் தீர்வு:**

செங்கல்பட்டு மின்பகிர்மான வட்டம், மின்நுகர்வோர் குறைதீர்க்கும் மன்றம் தன்னுடைய தீர்வை 19.11.2021 நாளிட்ட ஆணையில் தெரிவித்துள்ளது. அந்த ஆணையின் சம்பந்தப்பட்ட பத்தி கீழே கொடுக்கப்பட்டுள்ளது.

*"**மன்றத்தின் தீர்வு**:*

*As per the TNE (Dis) code 27(12), the petitioner should submit the NOC obtained from the revenue department, i.e. not below the rank of Deputy Tahsildar, for effecting the domestic service connection, and hence the petition closed and no costs."*

4.0 <u>மின்குறைதீர்ப்பாளரின் கேட்புரை</u>:

4.1 மேல்முறையீட்டாளரும் எதிர்மனுதாரரும் தங்களது தரப்பு வாதங்களை எடுத்துரைப்பதற்கு வசதியாக 09.03.2022 அன்று காணொலி மூலம் கேட்புரை நடத்தப்பட்டது.

4.2 மேல்முறையீட்டாளர் சார்பாக திரு மு.சாமிக்கண்ணு அவர்கள் கேட்புரை நாளில் கலந்து கொண்டு தன்னுடைய வாதத்தை எடுத்துரைத்தார்.

4.3 எதிர்மனுதாரர் திரு A. பாலசுப்பிரமணியம், செயற்பொறியாளர்/ இ&ப/ மறைமலைநகர், செங்கற்பட்டு மின்பகிர்மான வட்டம் அவர்கள் கேட்புரை நாளில் கலந்து கொண்டு தன்னுடைய வாதத்தை எடுத்துரைத்தார்.

4.4 மின்குறைதீர்ப்பாளரின் முன்பு சமர்ப்பிக்கப்படும் மனு மேல்முறையீட்டு மனு என்பதால் மின்குறைதீர்மன்றத்தில் மனுதாரரால் வைக்கப்பட்ட கோரிக்கைகள் சம்மந்தப்பட்ட வாதங்கள் மட்டுமே தீர்விற்கு எடுத்துக் கொள்ளப்படுகிறது. குறைதீர் மன்றத்தின் நடவடிக்கைகள், குறைதீர் மன்றத்தில் சமர்ப்பிக்கப்படாத புதிய நிவாரணங்கள் அல்லது பணியாளர் ஒழுங்கு நடவடிக்கை சம்மந்தப்பட்ட கோரிக்கைகள் முதலியன மின்நுகர்வோர் குறைதீர்க்கும் மன்றம் மற்றும் மின்குறைதீர்ப்பாளருக்கான ஒழுங்குமுறை விதிகளின்படி மின்குறைதீர்ப்பாளரின் தீர்விற்கு எடுத்துக் கொள்ளப்படவில்லை.

5.0 <u>மேல்முறையீட்டாளரின் வாதங்கள்</u>:

5.1 செங்கல்பட்டு மாவட்டம், திருப்போரூர் வட்டம், காலவாக்கம் கிராம, தாழ்த்தப்பட்ட மக்களுக்கு அரசு இலவச நிலம் வழங்கும் அரசாணையின்படி "பஞ்சமி நிலம்" திருப்போரூர் பேரூராட்சி தலைவரின் செயல்முறை ஆணை எண் 53 நாள் 28.7.1964– இன்படி காலவாக்கம் கிராம சர்வே எண் 241/1 இல் உள்ள அரசு மேய்க்கால் புறம்போக்கு நிலத்தில் வீடு கட்டிக்கொண்டு விவசாயம் செய்வதற்கு நிலங்கள் வழங்கப்பட்ட நிலத்தில் தனது குடும்ப முன்னோரான தனது பாட்டி லேட். சின்னக்கண்ணு அவர்கள் குடிசை வீடு அமைத்து விவசாயம் செய்து வந்ததாக மேல்முறையீட்டாளர் தெரிவித்துள்ளார்.

5.2 அவர்களது பெயர் கிராம அடங்கள் பதிவேட்டில் பதிவு செய்யப்பட்டுள்ளதாகவும், அவரது மறைவுக்கு பின்பு இந்த நிலத்தில் கடந்த 10 ஆண்டுகளுக்கு மேலாக தனது அனுபோகத்தில் இருந்து வருவதாகவும், இந்த நிலத்திற்கு நிலப்பட்டா வழங்க மாவட்ட ஆட்சியருக்கு விண்ணப்பம் செய்ததாகவும், நிலப்பட்டா வழங்காமல் இருந்து வந்ததால் மேல்முறையீட்டாளர் சென்னை உயர்நீதிமன்றத்தில் வழக்கு தொடர்ந்து நிலப்பட்டா வழங்க ஆணை பெற்றதாகவும், (W.P.No.15966/2012 dt. 17.02.2017) ஆயினும் வருவாய் துறை பட்டா வழங்காமல் இருந்து வந்ததால் தமிழக முதல்வரின் சிறப்பு குறைதீர் திட்டத்தில் நீதிமன்ற ஆணையின்படி தனக்கு நிலப்பட்டா வழங்க விண்ணப்பம் செய்ததாகவும் மேல்முறையீட்டாளர் தெரிவித்துள்ளார்.

5.3 தனது விண்ணப்பம் திருப்போரூர் வட்டாட்சியரின் ந.க.1021/2019ஆ1 நாள் 22.10.2019 இன்படி மாவட்ட ஆட்சியருக்கு அனுப்பப்பட்டு மாவட்ட ஆட்சியரால் தனது நிலம் மேய்க்கால் வகைப்பாட்டில் இருந்து கிராம நத்தம் நிலமாக மாற்றம் செய்யப்பட்டதாகவும், ஆயினும் நிலப்பட்டா வழங்காமல் இருந்து வந்ததால் மேல்முறையீட்டாளர் நில நிர்வாக ஆணையருக்கு விண்ணப்பம் வழங்கியதாகவும், ஆணையரின் ந.க.எப்2/1069902/2021 நாள் 8.4.2021–இல் பட்டா வழங்க பரிந்துரை செய்து தனது விண்ணப்பம் மாவட்ட ஆட்சியருக்கு அனுப்பப்பட்டதாக மேல்முறையீட்டாளர் தெரிவித்துள்ளார்.

5.4 இந்த நிலத்தில் மேல்முறையீட்டாளர் கட்டியுள்ள வீட்டிற்கு திருப்போரூர் பேரூராட்சியில் வீட்டுவரி செலுத்தி ரசீது பெற்றுள்ளதாகவும், வீட்டுவரி ரசீது அடிப்படையில் கிராம நத்த நிலத்தில் மேல்முறையீட்டாளர் கட்டியுள்ள வீட்டிற்கு மின் இணைப்பு வழங்குமாறு கடந்த 18.06.2021–இல் தமிழ்நாடு மின்சார வாரியத்திற்கு விண்ணப்பம் செய்ததாக மேல்முறையீட்டாளர் தெரிவித்துள்ளார்.

5.5 விண்ணப்ப எண் 200095720621608, மின் இணைப்பு பெறுவதற்கான டெபாசிட் தொகை செலுத்துவதற்காக திருப்போரூர் மின்வாரிய உதவி பொறியாளரை அணுகிய போது அவர்கள் நீதிமன்ற ஆணையின்படி தமிழ்நாடு மின்சார வாரிய தலைமை பொறியாளரின் சுற்றறிக்கையில் அரசு புறம்போக்கு நிலங்களில் மின் இணைப்பு வழங்கக்கூடாது என்று கூறியதாக மேல்முறையீட்டாளர் தெரிவித்துள்ளார்.

5.6 மேலும் வட்டாட்சியரிடமிருந்து மின் இணைப்பு வழங்குவதற்கு தடையின்மை (NOC) சான்று பெற்று வந்தால் மின் இணைப்பு வழங்க முடியும் என தெரிவித்ததாகவும், தான் அவர்களிடம் நீதிமன்ற ஆணையில் நீர் நிலை புறம்போக்கு நிலங்களை ஆக்கிரமித்து கட்டியுள்ள கட்டிடங்களுக்கு மின் இணைப்பு வழங்கக்கூடாது என தெரிவிக்கப்பட்டுள்ளதாகவும், மேலும் நீர்நிலை புறம்போக்கு சர்வே எண் பதிவேட்டை வருவாய் துறையினர் தங்களது எல்லைக்குட்பட்ட மின்வாரிய அலுவலகம், உள்ளாட்சி அமைப்புகள், பதிவு துறைக்கு வழங்க வேண்டும் எனவும், இதன்படி மின்சார வாரியம் நீர் நிலைகளுக்கு மின் இணைப்பு வழங்க கூடாது எனவும், பேரூராட்சி வீட்டுவரி வழங்க கூடாது எனவும், பதிவுத் துறை பதிவு செய்யக்கூடாது என இதில் குறிப்பிடப்பட்டுள்ளதாக மேல்முறையீட்டாளர் தெரிவித்துள்ளார்.

5.7 ஆனால் கிராம நத்தம், மேய்க்கால், மந்தைவெளி உள்ளிட்ட அரசு புறம்போக்கு நிலங்களில் உள்ள குடியிருப்புகளுக்கு மின் இணைப்பு வழங்க கூடாது என இந்த நீதிமன்ற தீர்ப்பில் குறிப்பிடப்படவில்லை எனவும், சென்னை தலைமை அலுவலகத்தின் தலைமை மின்பொறியாளர் கடிதத்திலும் நீர்நிலை புறம்போக்கில் மின் இணைப்பு வழங்க கூடாது என தெரிவிக்கப்பட்டுள்ளதாகவும், மேற்குறிப்பிட்டுள்ள அரசு புறம்போக்கு நிலங்களில் உள்ள குடியிருப்புகளுக்கு வருவாய் துறை வட்டாட்சியரிடமிருந்து தடையின்மை சான்று (NOC) பெற்று மின் இணைப்பு வழங்க வேண்டும் என்று குறிப்பிடப்படவில்லை என தெரிவித்ததாக மேல்முறையீட்டாளர் தெரிவித்துள்ளார்.

5.8 அதனால் தனது நிலம் அரசு மூலம் வழங்கப்பட்டு மேய்க்கால் நிலத்தை வட்டாட்சியர் கடிதம் மூலம் கிராம நத்தமாக மாவட்ட ஆட்சியரால் மாற்றம் செய்யப்பட்டதாகவும், அதனால் தனது குடியிருப்புக்கு மின் இணைப்பு வழங்குவதற்கு தடை ஏதுமில்லை என்று மேல்முறையீட்டாளர் தெரிவித்துள்ளார்.

5.9 எதிர்மனுதாரர் கடிதத்தில் வழங்கப்பட்ட தகவல்கள் முரண்பாடாக உள்ளதாகவும், தனது நிலம் தாழ்த்தப்பட்ட மக்களுக்கு இலவசமாக நிலம் வழங்கும் திட்டத்தில் திருப்போரூர் பேரூராட்சியின் தீர்மானத்தின் மூலம் கடந்த 56 ஆண்டுகளுக்கு முன்பாக வழங்கப்பட்டு தனது அனுபவத்தில் இருந்து வரும் நிலத்திற்கு சென்னை உயர்நீதி மன்றம் தனக்கு பட்டா வழங்க ஆணையிட்டு இதன் அடிப்படையில் பட்டா வழங்க

நடவடிக்கையில் இருந்து வரும் நிலத்தில் தான் கட்டியுள்ள வீட்டிற்கு பேரூராட்சியின் மூலம் வீட்டு வரி செலுத்தியுள்ளதாக மேல்முறையீட்டாளர் தெரிவித்துள்ளார்.

5.10 மேலும் இந்த சர்வே எண்ணில் உள்ள குடியிருப்புகளுக்கு மின் இணைப்பு வழங்கப்பட்டுள்ளதாகவும், தனது விண்ணப்பத்தை பரிசீலனை செய்து தனது குடியிருப்புக்கு மின் இணைப்பு வழங்க வேண்டும் என மேல்முறையீட்டாளர் கேட்டுக் கொண்டுள்ளார்.

**6.0 <u>எதிர்மனுதாரரின் வாதங்கள்</u>:**

6.1 மேல்முறையீட்டாளர் திரு.தியாகு கடந்த 18.06.2021 அன்று மின் இணைப்பு வேண்டி விண்ணப்பித்ததாகவும், அதற்குரிய தொகை செலுத்த உதவி பொறியாளரை அனுகிய போது அவர் "தமிழ் நாடு மின்சார வாரியத்தின் சுற்றறிக்கையில் அரசு புறம்போக்கு நிலத்தில் வீடு கட்டியுள்ளவர்களுக்கு வருவாய் துறை வட்டாட்சியரின் தடையின்மை சான்று பெற்றுவந்தால் மின் இணைப்பு வழங்க இயலும் என தெரிவித்திருந்ததாகவும், ஆனால் அந்த கடிதத்தில் நீர்நிலை புறம்போக்கு நிலங்களில் மின் இணைப்பு பெறுவதற்கு துறை வட்டாட்சியர் பதவிக்கு குறையாத அலுவலரிடம் மறுப்பின்மை சான்று பெற்று மின் இணைப்பு வழங்கலாம் என தெரிவிக்கப்பட்டுள்ளதாக எதிர்மனுதாரர் தெரிவித்துள்ளார்.

6.2 மேலும், ச.எண்.241/1 இல் பட்டா வழங்கும் பட்சத்தில் மின் இணைப்பு வழங்க இயலும் அல்லது ச.எண்.241/1இல் அத்துறை சார்ந்த தாசில்தார் அவர்களிடம் மின் இணைப்பு வழங்க தடையில்லா சான்று பெற்று வழங்கினால் மட்டுமே மின்வாரிய விதிமுறைகளின்படி நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்று தெரிவித்துள்ளதாக எதிர்மனுதாரர் தெரிவித்துள்ளார்.

6.3 As per the TNE (Dis)code 27 (12), the petitioner should submit the NOC obtained from the revenue department from an officer not below the rank of Deputy Tahsildar, for effecting the domestic service connection" என்று எதிர்மனுதாரர் தெரிவித்துள்ளார்.

6.4 அதன் பிறகு மேல்முறையீட்டாளர் மின் இணைப்பிற்கு, இந்நாள் வரையில் NOC பெற்று விண்ணப்பம் ஏதும் பதிவு செய்யப்படவில்லை எனவும், மேலும் மேல்முறையீட்டாளர் தெரிவித்தது போல் ச.எண்.241/1–ற்கு பட்டா வழங்கும் பணி

நடைமுறையில் உள்ளதாகவும் தெரிவித்திருந்த நிலையில் பட்டாவுடன் விண்ணப்பம் ஏதும் இதுவரை பதிவு செய்யப்படவில்லை என எதிர்மனுதாரர் தெரிவித்துள்ளார்.

7.0 <u>மின் குறைதீர்ப்பாளரின் தீர்வு</u>:

7.1 இருதரப்பு வாதங்கள் மற்றும் சமர்ப்பிக்கப்பட்ட ஆவணங்கள் ஆகியவற்றை ஆராய்ந்து கீழ்க்கண்டவாறு தீர்வு செய்யப்படுகிறது.

7.2 தனது பாட்டிக்கு "பஞ்சமி நிலம்" திட்டத்தில் வழங்கப்பட்ட ச. எண். 241/1–இல் உள்ள அரசு மேய்க்கால் புறம்போக்கு நிலத்தில் குடிசை வீடு கட்டி விவசாயம் செய்து வருவதாகவும், கடந்த 10 ஆண்டுகளாக தன் அனுபோகத்தில் இருந்து வருவதாகவும், நீதிமன்ற ஆணையின்படி தனக்கு பட்டா வழங்க விண்ணப்பம் அளித்ததாகவும், மாவட்ட ஆட்சியர் மேற்படி மேய்க்கால் புறம்போக்கு நிலத்தை நத்தம் நிலமாக மாற்றம் செய்யப்பட்டதாகவும், பட்டா வழங்க நில நிர்வாக ஆணையர் பரிந்துரைத்து மாவட்ட ஆட்சியருக்கு அனுப்பப்பட்டுள்ளதாக மேல்முறையீட்டாளர் தெரிவித்துள்ளார். மேற்படி கிராம நத்த நிலத்தில் வீடுகட்டி வீட்டுவரி ரசீது பெற்று மின் இணைப்பு வழங்குமாறு எதிர்மனுதாரரிடம் 18.06.2021–இல் விண்ணப்பம் சமர்ப்பித்துள்ளதாகவும், ஆனால் வருவாய் துறை வட்டாட்சியரிடமிருந்து தடையில்லா சான்று பெற்று சமர்ப்பிக்கும் பட்சத்தில் புதிய மின் இணைப்பு வழங்கப்படுமென எதிர்மனுதாரர் தெரிவித்ததாக மேல்முறையீட்டாளர் தெரிவித்துள்ளார். மேய்க்கால் புறம்போக்கு நிலம் கிராம நத்தம் நிலமாக மாவட்ட ஆட்சியர் மாற்றம் செய்துள்ளதால் மின் இணைப்பு வழங்க தடையேதுமில்லை என மேல்முறையீட்டாளர் தெரிவித்துள்ளார்.

7.3 மேல்முறையீட்டாளரின் வீடு அமைந்துள்ள ச.எண் 241/1–க்குரிய பட்டா சமர்ப்பிக்கப்படும் பட்சத்தில் மின் இணைப்பு வழங்க முடியுமென்றும், அல்லது வருவாய் துறை சார்ந்த தாசில்தார் அவர்களிடமிருந்து மின் இணைப்பு பெற தடையில்லா சான்று பெற்று சமர்ப்பித்தால் மட்டுமே மின் இணைப்பு வழங்க நடவடிக்கையெடுக்கப்படுமென எதிர்மனுதாரர் தெரிவித்துள்ளார். மேலும் தமிழ்நாடு மின்சார பகிர்மான விதி 27(12)–இன்படி புறம்போக்கு நிலத்தில் மின் இணைப்பு பெற வருவாய் துறை துணை வட்டாட்சியருக்கு கீழ் பதவி அல்லாத உரிய வருவாய்துறை அதிகாரியின் மறுப்பின்மை சான்று (NOC) (NOC from the revenue department not below the rank of Deputy Tahsildar) பெற்று சமர்ப்பித்தால் மட்டுமே மின் இணைப்பு வழங்கப்படுமென எதிர்மனுதாரர்

தெரிவித்துள்ளார். எனவே, நான் தமிழ்நாடு மின்சாரப் பகிர்மான விதி 27(12)–ஐ ஆராய விரும்புகிறேன். அந்த விதி கீழே கொடுக்கப்பட்டுள்ளது.

*"27. மின் ஆற்றல் வழங்கலுக்கான கேட்புகள்:*

*27(12): புறம்போக்கு நிலங்கள்/அரசு நிலங்களில் தமிழ்நாடு அரசின் உரிய அலுவலரிடமிருந்து பெற்ற மறுப்பின்மைச் சான்றிதழ் அளித்தால் மின்னிணைப்பு வழங்கப்படும். மேலும் விண்ணப்பதாரர் இவ்விதியின் பின்னிணைப்பு III–இல் உள்ள படிவம்–6 படியான காப்புறுதி பத்திரமும், இயல்பான காப்புறுதித் தொகையை போல இரட்டிப்பு மடங்கு காப்புறுதி தொகையை செலுத்த வேண்டும்."*

7.4 மேற்கண்ட தமிழ்நாடு மின்சாரப் பகிர்மான விதி 27(12)–இன் படி நாம் அறிய வருவது, புறம்போக்கு நிலங்கள்/அரசு நிலங்களில் தமிழ்நாடு அரசின் உரிய அலுவலரிடமிருந்து பெற்ற மறுப்பின்மைச் சான்றிதழ் அளித்தால் மின்னிணைப்பு வழங்கப்படும். மேலும் விண்ணப்பதாரர் இவ்விதியின் பின்னிணைப்பு III–இல் உள்ள படிவம்–6 படியான காப்புறுதி பத்திரமும், இயல்பான காப்புறுதித் தொகையை போல இரட்டிப்பு மடங்கு காப்புறுதி தொகையை செலுத்த வேண்டும் என அறிய முடிகிறது. இவ்வழக்கில் கிராம நத்தம் நிலத்தில் கட்டியுள்ள தனது வீட்டிற்கு புதிய மின் இணைப்பு வழங்குமாறு மேல்முறையீட்டாளர் கோரியுள்ளார். மேற்படி நிலத்திற்கு பட்டா பெறுவதற்கு விண்ணப்பித்து நிலுவையில் இருப்பதாகவும், மேய்க்கால் புறம்போக்கு நிலம் கிராம நத்தமாக மாவட்ட ஆட்சியர் ஆணை பிறப்பித்துள்ள நிலையில் மின் இணைப்பு வழங்க தடையேதும் இல்லையென மேல்முறையீட்டாளர் அவரின் வாதுரையில் தெரிவித்துள்ளார். எனவே, பட்டா வழங்கப் பெறாத நிலையில் மேல்முறையீட்டாளரின் கிராம நத்தம் நிலம் அரசு நிலமாகத்தான் கருதமுடியும், மேல்முறையீட்டாளரின் சொந்த நிலமாக கருத இயலாது. எனவே, தமிழ்நாடு மின்சாரப் பகிர்மான விதி 27(12)–இன்படி தமிழ்நாடு அரசின் உரிய அலுவலரிடமிருந்து பெறப்பட்ட மறுப்பின்மைச் சான்று சமர்ப்பித்தால் மட்டுமே மின் இணைப்பு வழங்க இயலும் என தீர்வு செய்யப்படுகிறது.

**8.0 <u>முடிவுரை</u>:**

8.1 பத்தி 7.0–இல் உள்ள தீர்வின்படி, தமிழ்நாடு மின்சார பகிர்மான விதி 27(12)இன்படி தமிழ்நாடு அரசின் உரிய அலுவலரிடமிருந்து பெறப்பட்ட மறுப்பின்மைச் சான்று சமர்ப்பித்தால் மட்டுமே மின் இணைப்பு வழங்க இயலும் என தீர்வு செய்கிறேன்.

8.2 மேற்கண்ட தீர்வுடன் இந்த மேல்முறையீட்டு மனு எண் 05/2022 முடிவுக்கு கொண்டு வரப்படுகிறது. செலவுத் தொகை இல்லை.

**(செ. தேவராஜன்)**
மின்குறைதீர்ப்பாளர்

"நுகர்வோர் இல்லையேல், நிறுவனம் இல்லை"
**"No Consumer, No Utility"**

பெறுநர்:

1. திரு. S. தியாகு,
த/பெ. மு.சாமிக்கண்ணு,
எண் 7/A, கங்கையம்மன் கோயில் தெரு,
காலவாக்கம், திருப்போரூர் வட்டம்,
செங்கல்பட்டு மாவட்டம் – 603 110.

2. செயற்பொறியாளர்/ இ&ப/மறைமலைநகர்,
செங்கற்பட்டு மின் பகிர்மான வட்டம்,
தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம்,
110 KV SS வளாகம், GST ரோடு,
போர்டு கம்பெனி அருகில்,
மறைமலைநகர் – 603 209.

3. மேற்பார்வை பொறியாளர், – By email
செங்கற்பட்டு மின்பகிர்மான வட்டம்,
தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம்,
எண்.130, GST ரோடு, செங்கற்பட்டு – 603 001.

4. தலைவர் மற்றும் நிர்வாக இயக்குநர், – By email
தமிழ்நாடு மின்உற்பத்தி மற்றும் பகிர்மானக் கழகம்,
நடிப்பிசைப் புலவர் கே.ஆர். ராமசாமி மாளிகை,
144, அண்ணாசாலை, சென்னை – 600 002.

5. செயலாளர், தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையம், – By email
4வது தளம், சிட்கோ தலைமை நிர்வாக அலுவலக கட்டிடம்,
திரு.வி.க. தொழிற்பேட்டை,
கிண்டி, சென்னை – 600 032.

6. உதவி இயக்குநர் (கணினி) – தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையம் இணையதளத்தில் வெளியிடுவதற்காக
தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையம்,
4வது தளம், சிட்கோ தலைமை நிர்வாக அலுவலக கட்டிடம்,
திரு.வி.க. தொழிற்பேட்டை,
கிண்டி, சென்னை – 600 032.